# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 318/2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 5 |
| Name | : செல்வம். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2024.

- - - - - - -

1 மற்றும் 5 எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்கு மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் இ.பெருமாள்பட்டியில் குடியிருந்துவருகிறேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளைத் தெரியும். சுமார் 10 வருடத்திற்கு முன்னர், ராமர் வீட்டிற்கு முன்னர் காலை சுமார் 10 மணியளவில் போலிசார் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2வது உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்ததார்கள்.

<u>குறுக்கு விசாரணை -</u>

சம்பவம் இடம் எழுமலையில் தான் நான் கையெழுத்துப் போட்டேன் என்றால் சரிதான். நான் வாழும் இடம் இ.பெருமாள்பட்டி என்றால் சரிதான். எழுமலையிலிருந்து 2 கி. மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் வருவதற்கு முன்னர் வாதி வீட்டின் முன்பு ஆட்கள் கூடியிருந்தார்களா என்றால் ஆமாம். நானும், ராஜாவும் சேர்ந்து வந்தோமா, அல்லது தனித்தனியாக வந்தோமா என்றால் சேர்ந்தே வந்தோம். சம்பவ சம்பந்தமாக கேள்விப்பட்டு பார்க்க வந்தோம். பாதிக்கப்பட்ட வாதி என் மைத்துனர் ஆவார். ஏற்கனவே போலிசார் இருந்தார்கள். கூட்டமாக இருந்தது. வரைபடம் வரைந்தார்கள். என்னை உறவினர் என்பதால் வரைபடத்தில் கையெழுத்துப் போடச் சொன்னார்கள் என்றால் சரிதான். அதனால்தான் நான் போட்டேன் என்றால் சரிதான்.. ஒரு கையெழுத்து மட்டும்தான் போட்டேன். நான் சொன்னதுபோல் வரைபடத்தில் கையெழுத்துப் போட்டேன் என்றால் சரிதான்.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 09.02.2024.

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.